**அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.**

**மேற்குறிப்பாணை எண்.5719/ஏ–1/2024, நாள் 06.01.2025**

---

**பொருள்** : நிர்வாகம் – அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி, கெலமங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம் – கல்லூரி மாணவ / மாணவிகளின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் அவர்களின் நலன் கருதி கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் – தொடர்பாக.

**பார்வை** : கிருஷ்ணகிரி மாவட்டம், காவல் கண்காணிப்பாளரின் ந.க.எண்.179/சூ.கா.க/சை.கி.பி/2024, நாள் 31.12.2024.

---

பார்வையில் காணும் கடிதம் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.

ஒம்/–பா.பெ.கோவிந்தராசு
முதல்வர் (மு.கூ.பொ.)

**பெறுநர்**

| | |
|---|---|
| அனைத்து துறைத்தலைவர்கள் / துறைத்தலைவர் (பொ) / ஆசிரியர்கள் / அலுவலர்கள் / அமைச்சு / தொழில் நுட்ப / அடிப்படை பணியாளர்கள்,<br>அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி,<br>கெலமங்கலம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113. | **பயிலக வாட்ஸ்அப் குழு மூலம்** |

நகல்: விடுதி காப்பாளர், அரசு பாலிடெக்னிக் கல்லூரி பிற்படுத்தப்பட்டோர் விடுதி,
அரசு பலவகை தொழில் நுட்பக் கல்லூரி,
கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.

நகல்: அனைத்து காவலர்கள்

நகல்: முதல்வர் / விடுதி காப்பாளர்

நகல்: விடுதி இணை காப்பாளர்

நகல்: மகளிர் விடுதி துணை காப்பாளர்

நகல்: CCTV கேமரா பொறுப்பு அலுவலர்

| | |
|---|---|
| நகல்: அனைத்து வகுப்பாசிரியர்கள் | அனைத்து மாணவியர்களின் கைப்பேசியில் **Kaval App**– காவல் செயலி **Install** செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஏதாவது மாணவிகளுக்கு பிரச்சனை ஏற்பட்டால் மேற்கண்ட App மூலமாகவும் தகவல் தெரிவிக்க வேண்டும் என்றும் மாணவிகளுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. |

நகல்: NSS பொறுப்பு அலுவலர்

நகல்: YRC பொறுப்பு அலுவலர்

நகல்: வளாக அலுவலர்

நகல்: அறிவிப்பு பலகைகள் (பயிலகம் / விடுதிகள்)

நகல்: முதல்வரின் நேர்முக உதவியாளர்

நகல்: கண்காணிப்பாளர் (நிர்வாகம் / கணக்குகள்)

நகல்: உதிரி

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

8/1/25

**கண்காணிப்பாளர்**

7.1.25

காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்.

02 JAN 2025

முன்னிலை – P. தங்கதுரை
காவல் கண்காணிப்பாளர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

ந.க.எண். 179/[illegible]/கி.பி./2024 நாள் .31.12.2024

பொருள் : கல்லூரி மற்றும் பள்ளி மாணவ மாணவிகளின் பாதுகாப்பிற்காகவும் மற்றும் அவர்களின் நலன் கருதி கடைபிடிக்க வேண்டிய சில நடவடிக்கை -தொடர்பாக.

கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 113.
முதல்வர் | மு.நி.உ | பொருளாளர் | க.கா.(நி) | க.கா.(க)

**********

பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளின் பாதுகாப்பு நலன் கருதி பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் கீழ்க்கணடவாறு.

1. அனைத்து பள்ளி கல்லூரிகளுக்கு முன்பு உள்ள சாலைகள், பேருந்த நிலையங்களை கண்காணிக்கும் வகையில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

2. பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர் அனைவரும் அந்நிய நபர்கள் உடன் பள்ளி கல்லூரி வளாகத்திற்குள் வருவது முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும்.மற்றும் யாதொரு
அந்நிய நபர்கள் கல்லூரி வளாகத்திற்குள் நுழையும்போது கல்லூரி நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட காப்பாளர் மூலம் விசாரணை செய்த பின்பு அனுமதிக்கபடவேண்டும்.

3. மாணவ மாணவியர்கள் வெளியில் சென்று பள்ளி கல்லூரிகளுக்கு, விடுதிக்கு திரும்பி வரும் கால நேரம் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. மாணவ மாணவியர் விடுதியில் தங்கும்போது அவர்களின் விடுதி காப்பாளர் மாணவர்களின் செயல்பாடுகளை தினந்தோரும் கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறது. அவர்களின் இயல்பான செயல்பாட்டிற்கு மாறாக இருந்தால் உடனடியாக சம்மந்தப்பட்டவர்களுக்கு அல்லது கல்லூரி நிர்வாகத்திற்கும் அல்லது பெற்றோர்களுக்கு தேவைப்பட்டால் காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

5. மாணவியர் விடுதியில் தங்கியிருக்கும் பெண் விடுதி காப்பாளர் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் விடுதியில் தங்கியிருக்க வேண்டும்.

6. பள்ளி கல்லூரிக்கு வரும் அனைவரையும் கண்காணிக்கும் பொருட்டு பள்ளியின் அனைத்து நுழைவாயில் அருகே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் இயல்பான சூழ்நிலைக்கு மாறாக ஏதேனும் நடந்தால் உடனடியாக பெற்றோர் அல்லது பள்ளி ஆசிரியர் அல்லது காவல் துறைக்கு தெரிவிக்கும் வகையில் அறிவுறுத்தப்பட வேண்டும்.

8. ஒவ்வொரு மாணவியர்களும் தனது கைப்பேசியில் **Kaval App** - காவல் செயலி Install செய்யப்பட்டிருக்க வேண்டும். ஏதாவது மாணவிகளுக்கு பிரச்சனை ஏற்பட்டால் மேற்கண்ட App மூலமாகவும் தகவல் தெரிவிக்க அறிவுறுத்தப்படவேண்டும்.

9. பள்ளி கல்லூரி வளாகத்தில் பார்வையில் படும் விதமாகவும்,விடுதி வளாகத்திலும் உள்ளூர் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் நிலைய தொலைபேசி எண் எழுதி ஒட்டியிருக்க வேண்டும்.

10. பள்ளி /கல்லூரிகளில் நடத்தப்படும் சிறப்பு வகுப்புகள், NCC/NSS/Scout போன்ற முகாம்கள், கலை நிகழ்சிகள், ஆண்டு விழா நிகழ்சிகளின்போது வெளி நபர்களை பயிற்றுநர்களாக நியமிப்பதை தவிர்கவேண்டும். மேலும் கல்வித்துறை உயர் அதிகாரிகளிடம் அனுமதி பெற்று நடத்தவேண்டும்.

11. அனைத்து பள்ளி கல்லூரி வளாகத்திலும் மற்றும் மாணவியர்கள் விடுதிகளிலும் புகார் பெட்டி வைத்து முறையாக வாரம் ஒருமுறை கல்லூரி முதல்வர் அவர்களின் முன்னிலையில் புகார் பெட்டியை திறந்து பார்த்து அதில் ஏதேனும் புகார்மனு இருப்பின் அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

12. பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளிடம் அத்துமீறி செயல்பட முயற்சிக்கும் நபர் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

காவல் கண்காணிப்பாளர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பெறுதல்

மாவட்ட கல்வி அலுவலர், கல்லூரி கல்வி மண்டல இணை இயக்குநர், தருமபுரி, அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி தாளாளர், தலைமை ஆசிரியர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம்.